[27th September 1961

போதிப்பதில், வகுப்புகள் அடிப்படையில், தனியார் நடத்தும் பாடசாலைகளை சர்க்காரே எடுத்து நடத்துவதுதான் அதற்கு வழி. ஆகவே, அதைச் செய்ய இப்பொழுதே முயற்சி எடுக்க வேண்டும் என்பதை அமைச்சரவர்கள் உணருகிறார்களா ? அதற்கான நடவடிக்கைகள் எடுக்க முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம், தனிப்பட்ட ஜாதியார் நடத்தும் பள்ளிகள் இருக்கின்றன ; ஆனால் அவற்றில் எல்லாக் குழந்தைகளும் படிக்க ஏற்பாடு இருக்கிறது. தனிப்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் என்றிருந்தால், அந்தப் பள்ளிகளுக்கு சர்க்கார் உதவி பெற முடியாது ; ரெகக்னிஷன் கூட கொடுக்கலாமா வேண்டாமா என்பது கூட ஆலோசனை செய்து பார்க்க வேண்டியது. ஒரு சிலர் ஜாதி, மதப் பெயர்களை எடுத்துவிட்டுப் புதுப் பெயர்கள் வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் சட்டம் போட்டு மாற்ற வேண்டுமா என்ற கருத்தும் இருக்கிறது. இனிமேல் வரும் பள்ளிகளில், ஜாதி, மத அடிப்படையில் இருந்தால், அவைகளுக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது என்ற முறையிலே சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவை பரிசீலனையில் இருக்கின்றன.

Holiday huts (Mahabalipuram)

* 1863 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government of India have recommended construction of holiday huts on the beach between Madras and Mahabalipuram; and

(b) if so, the steps taken by the State Government to provide such amenity?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) A scheme for the construction of holiday huts on the Madras-Mahabalipuram beach at an estimated cost of Rs. 3·74 lakhs has been included under the Tourist Development Plan of the Third Five-Year Plan.

(b) It will be taken up for execution during 1962-65.

SRI A. A. RASHEED : May I know the number of such huts that will be constructed on the Madras-Mahabalipuram beach?

THE HON. SRI C. SUBRAMANIAM : As many number of them as our finances would permit.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether we are getting any aid from the Government of India in this regard and, if so, how much?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, this is a Plan Project under the Plan. So. whatever assistance is available to the other projects under the Plan will be available for this also.

Memorandum to the Finance Commission

***1864 Q.—SRI M. SELVARAJ (on behalf of SRI M.P. SARATHI) ;** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிதிக் கமிஷனிடம் இந்த ராஜ்ய அரசாங்கம் சமர்ப்பித்துள்ள அறிக்கைகள் சபை முன் வைக்கப்படுமா ?

(இ) நிதிக் கமிஷனிடம் இறுதி அறிக்கை சமர்ப்பிக்குமுன் அது பற்றி இச்சபையில் விவாதம் நடத்தப்படுமா ?